# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590


**ஆணை நாள் - 03.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 3001/SCIC/2023**

திரு.ல.ஈஸ்வரமூர்த்தி — மேல்முறையீட்டாளர்
9/220, சானார்பாளையம்
கூத்தம்பூண்டி கிராமம்
புள்ளம்கவுண்டம்பட்டி அஞ்சல்
திருச்செங்கோடு தாலுக்கா
நாமக்கல் - 637 202.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) .... பொதுஅதிகார அமைப்பு
மாவட்ட பதிவாளர் அலுவலகம்
நாமக்கல்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 20.05.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 22.06.2022 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 23.06.2022 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 20.02.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 13.01.2025 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 12.02.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், " பார்வை- உரிய இறப்பு மற்றும் வாரிசு சான்று இல்லாமல் உள்ளதை விட கூடுதல் விஸ்தீரணம் உரிமை உள்ளது என பொய்யான ஆவணங்கள் மற்றும் விவரங்கள் (False documents and statements) அளித்து மோசடி / போலிப் பத்திரங்கள் பதிவு செய்துள்ளது தொடர்பாக - 83-ன் கீழ் தாக்கல் செய்த புகார் மனு நாள் 12/04/2022 பெற்றுக் கொண்ட நாள் 18/04/2022 உள்ளிட்ட 4 (நான்கு) - தொடர்பாக - பார்வை-3-ல் சொல்லப்பட்ட புகார் மனுவின் மீது நாளது தேதி வரை என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்னும் என்னென்ன நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளது என்பது பற்றிய "தினசரி முன்னேற்ற அறிக்கை" விவரங்கள் / ஆவணங்கள் வழங்குமாறு வேண்டுகிறேன்" என்பன போன்று 8 (எட்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. எனினும், மனுதாரர் 28/05/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் விசாரணையின் பிறிதொரு தேதிக்கு ஒத்திவைப்பதோடு, காணொளி காட்சி வாயிலான விசாரணை வேண்டுமெனக் கோரியுள்ளார். மேலும், பொதுத் தகவல் அலுவலர், தனக்கு சரியான தகவல் வழங்க உத்தரவிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்குறிப்பிட்ட கடிதம், ஆணையத்தின் SCIC பிரிவிற்கு இன்று (03/06/2025) பிற்பகல் 03.00 மணிக்கு பெறப்பட்டது. மனுதாரரின் இறுதி நேர வேண்டுகோளை ஆணையத்தால் ஏற்க இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு பெ.சிவலிங்கம், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) நாமக்கல் பதிவு மாவட்டம் அவர்கள் ஆஜராகி ஏற்கனவே மனுதாரருக்கு 22/06/2022 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்களை அனுப்பியதாகவும், மீண்டும் சமீபத்தில் 13/01/2025 தேதியிட்டு இனவாரியான தகவல்களை அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். மனுதாரர், தனது ஆட்சேபணை மனுவை 12/02/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர், தான், ஆவணங்களின்படியான உரிய தகவலை மனுதாரருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3001/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்ட பதிவாளர் அலுவலகம்
நாமக்கல்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.ல.ஈஸ்வரமூர்த்தி
9/220, சானார்பாளையம்
கூத்தம்பூண்டி கிராமம்
புள்ளம்கவுண்டம்பட்டி அஞ்சல்
திருச்செங்கோடு தாலுக்கா
நாமக்கல் - 637 202.

RG/PC